**செய்தி வெளியீடு எண்: 346** **நாள் : 15.07.2015**

ஊலகத் தமிழ்ச் சங்கம் மதுரை நாள் : 15.07.2015

தமிழ் வளர்ச்சியில் தமிழ் அமைப்புகளின் பங்களிப்பு தேசியக் கருத்தரங்கம்

# தமிழுக்கும் தமிழர்களுக்கும் அரிய சேவைகள் ஆற்றும் அம்மா

## நவி மும்பைத் தமிழ்ச் சங்கம் பாராட்டு

நவி மும்பை, ஜுலை 15:

தமிழுக்காகவும் தமிழர்களுக்காகவும் அரிய சேவைகளை ஆற்றி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நவி மும்பைத் தமிழ்ச் சங்கம் நெஞ்சார்ந்த நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துள்ளது.

உலகத் தமிழ்ச் சங்கம் (மதுரை) மற்றும் நவி மும்பைத் தமிழ்ச் சங்கம் இணைந்து ‘தமிழ் வளர்ச்சியில் தமிழ் அமைப்புகளின் பங்களிப்பு’ எனும் தேசியக் கருத்தரங்கத்தினை நவி மும்பை, வாசியிலுள்ள மராட்டிய சாகித்திய கலா அரங்கத்தில் செவ்வாய்க்கிழமை (ஜுலை 14) நடத்தின.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறையின் அரசு செயலாளர் முனைவர் மூ. இராசாராம் இஆப., அவர்கள் தலைமை ஏற்று, கருத்தரங்கத்தைத் தொடங்கி வைத்து, விழாப் பேருரை ஆற்றினார்.

விழாவுக்கு ஏற்பாடு செய்த நவி மும்பைத் தமிழ்ச் சங்கத்தின் அறங்காவலர் குழுத் தலைவர் நா. மகாதேவன் பேசுகையில், ‘‘2014–15 ஆம் ஆண்டுக்கான தமிழ்த்தாய் விருதினை அம்மா அளிக்கும் பேறு நவி மும்பைத் தமிழ்ச் சங்கத்திற்குக் கிடைத்துள்ளது. இது ஊட்டச் சத்து, ஊக்க மருந்து போல் அமைந்துள்ளது. இதற்காக சங்கத்தினர் இதயம் கனிந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவின் வணிகத் தலைநகராகத் திகழும் மும்பையில், ஒரு வளாகத்தினைத் தமிழக அரசு அமைத்து, தனி முத்திரையைப் பதிக்க வேண்டும் என்பது எங்களது நெடுநாளைய கனவாகும். அதை நிறைவேற்ற தமிழக அரசு ஆவன செய்யவேண்டும்’’ என்று கேட்டுக் கொண்டார்.

விழாவைத் தொடங்கிவைத்த அரசுச் செயலாளர் முனைவர் மூ. இராசாரம் இஆப பேசியதாவது:

உலகிலேயே வேறு எந்த மொழியும் அமைப்பு வைத்து வளர்க்கப்பட்டதில்லை. தமிழ் மட்டுமே, அதுவும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சங்கம் வைத்து வளர்க்கப்பட்டது என்பது வரலாற்றின் பேருண்மை.

அதிலும் கடல் கொண்ட குமரிக் கண்டத்திலேயே முதல் சங்கம், இரண்டாம் சங்கம் அமைத்து அதில் ஏராளமான தமிழ் நூல்கள் படைக்கப்பட்டன என்று பின்னர் வந்த நூல்கள் உறுதி செய்கின்றன.

எனவே, அமைப்புகளால் தமிழ் மொழி காலம் காலமாக வளர்க்கப்பட்டு வந்துள்ளது என்பது தமிழ் மொழிக்கு மட்டுமே இருக்கும் சிறப்பாகும்.

உலகின் முதல் மொழி  மூத்தமொழி. எல்லா மொழிக்கும் தாயாய் விளங்கும் தனிப்பெரும் ஒப்பற்ற மொழி தமிழ்ஆகும்.

பல்லாயிரம் ஆண்டுப் பழைமை வாய்ந்த கிரேக்கம், இலத்தீன் ஹீப்ரு, வடமொழி, தமிழ் ஆகியவற்றில், தமிழ் மட்டுமே இன்றும் பேசப்பட்டு, இளமைத் துடிப்புடன் வாழ்கிறது என்றால், அதற்கான பல காரணங்களில் அமைப்பு நடத்தி, அதன் மூலம் மொழி வளர்க்கப்பட்டதே எனலாம்.

இந்நிலையில், தமிழ் வளர்ச்சியில் அமைப்புகளுக்கு இருக்கும் பங்கு தொடர்பாக இந்தக் கருத்தரங்கில் விவாதிக்கப்படுவது சாலப் பொருத்தமான பணியாகும்.

தமிழ் வளர்க்கும் பணிசார்ந்த அனைத்துத் தரப்பினர்க்கும் தக்க பல விருதுகளை வழங்கியும் படைப்புகளை ஊக்குவித்தும் மின் எண்மத்தில் பத்திரப்படுத்தியும் முத்திரை பதிக்கும் வண்ணம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க தமிழகஅரசு செயல்பட்டுவருகின்றது.

தமிழ்நாடு அரசு உலகப் பொதுமறையோடுஒப்பற்ற பாவேந்தரின் படைப்புகள்மட்டுமின்றி மகாகவி பாரதியின் வைரவரிகளும் சீன – அரபு மொழிகளில் பெயர்க்கப்பட்டு தமிழர்க்குப் பெருமிதம் சேர்க்கின்ற செயலை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செய்துள்ளது.

‘‘செயற்கரிய செய்வார் பெரியர், சிறியர்

செயற்கரிய செய்கலாதார்’’

என்று  வள்ளுவப் பெருந்தகை வலியுறுத்துகிறார். அவ்வகையில் யாரும் செய்யாத வகையில் தமிழுக்கு நமது அம்மா அவர்கள் செய்திருக்கிறார் என்பதை நினைவு கூரவேண்டும்.

படைப்பாற்றலில் சிறந்த தம் எண்ணங்களை நூல்கள் வாயிலாகப் பகிர்ந்து கொள்ளும் நூலாசிரியர்களுக்கு நிதியுதவி ரூபாய் 25,000/– லிருந்து 50,000/– ஆக உயர்த்தப்பட்டு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் அளிக்கப்படுகிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் சீரிய முயற்சியினால் முத்திரை பதிக்கும் சித்திரைப் புத்தாண்டு ஆண்டுதோறும் பெருமையுடன் கொண்டாடப்பட்டு வருவதன் மூலம் தமிழர்களின் உள்ளங்களில் உவகையை ஏற்படுத்தி உள்ளது.

‘‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’’ என்ற கோட்பாட்டின் கீழ் பல்லாண்டு காலமாக பல்வேறு தலைமுறைகளாகத் தமிழ்நாட்டிலிருந்து பிற இந்திய மாநிலங்களிலும் மற்றும் உலகமெங்கும் புலம்பெயர்ந்து வாழும் அனைத்து தமிழர்களும் ஒருங்கிணைந்து செயலாற்றிட தமிழர் அமைப்புகள் பெரும்பங்கு ஆற்றிவருகின்றன.  அத்தகைய அமைப்புகளை ஊக்குவிக்கும் வகையில் சிறந்த தமிழ் அமைப்புக்கு தமிழக அரசுசார்பில் விருதுகள் வழங்கவேண்டும் என்றுமாண்புமிகு அம்மா அவர்களின்அரசு நடைமுறைப்படுத்தியுள்ளது.

அதன்படி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க ஆண்டுதோறும் சிறந்த தமிழ் அமைப்புகளுக்கு ரூ.5 இலட்சம் பரிசுத் தொகையுடன் தமிழ்த்தாய் விருது வழங்கப்படுகிறது.

இதுபோல் ஒரு தமிழ் அமைப்புக்கு சிறந்த விருது இதுவரை தரப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

இந்த ஆண்டு அந்த விருதினை நவி மும்பைத் தமிழ்ச் சங்கம் பெற இருக்கிறது என்ற செய்தி மகிழ்ச்சி தருகிறது.

தமிழுக்கு அருந்தொண்டாற்றிய தமிழறிஞர்கள் புலவர்களான கபிலர், கம்பர், உ.வே.சா., ஜி.யூ.போப், உமறுப் புலவர், இளங்கோவடிகள் ஆகியோர் பெயர்களிலும், ‘‘சொல்லின் செல்வர்’’ என்ற விருதுகள் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் தோற்றுவிக்கப்பட்டன என்பது குறிப்பிடத் தக்கது.

இயல் இசை நாடகம் என்ற முத்தமிழை விரிவுபடுத்தும் வகையில் நான்காம் தமிழாக அறிவியல் தமிழை நமது முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள்

கண்டறிந்தார். அத்துடன் நில்லாமல், அத்தமிழை வளர்க்கும் விதமாக, கணினித் தமிழை மேம்படுத்தும் சீரிய பணியில் ஈடுபடுவோரைச் சிறப்பிக்கும் விதத்தில், ‘‘முதலமைச்சர் கணினித் தமிழ் விருது’’ உருவாக்கப்பட்டு அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

அத்துடன், அம்மா அவர்களின் ஆணைக்கு இணங்க, தமிழறிஞர்கள், தமிழ் ஆர்வலர்கள் தமிழகம் முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் கண்டறியப்பட்டு, மாவட்டத்திற்கு ஒருவர் எனத் தெரிவு செய்து ‘‘தமிழ்ச்செம்மல்’’ என்ற விருது வழங்கப்படவுள்ளது என்பதை இம்மன்றத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவிக்க விரும்புகிறேன்.

அன்னைத் தமிழ்மீது ஆர்வமும் இலக்கை அடையும் துடிப்பும்மிக்க எதிர்காலச்சந்ததியினர் ஏற்றம்பெறும் வகையில் இளந்தமிழர் இலக்கியப் பட்டறை வாயிலாக ஆண்டுதோறும் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது.

தமிழ்த்தாய் விருது பெற்ற தில்லித் தமிழ்ச் சங்கத்திற்கு அலங்கார நுழைவுவாயில் அமைத்திட ரூ.25 இலட்சம் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் வழங்கப்பட்டுள்ளது.

எங்கும் தமிழ், எதிலும் தமிழ் அன்னைத் தமிழே ஆட்சிமொழி என்னும் வகையில் தமிழ் வளர்ச்சிக்காகவும் தமிழர்களின் நலத்திற்காகவும் தமிழறிஞர்கள் உயர்விற்காகவும் எண்ணிலா நற்செயல்களை மாண்புமிகு அம்மா அவர்களின் தமிழக அரசு செய்து வருகின்றது.

உலகெங்கும் உள்ள தமிழ் அமைப்புகளையும் தமிழர்களையும் ஒரு குடையின் கீழ் ஒன்றுபடுத்தும் வகையில் மாண்புமிகு அம்மாஅவர்களின் ஆணையின் பேரில் மதுரையில் மீண்டும் புதுப்பொலிவுடன் உலகத் தமிழ்ச் சங்கத்தினைத் தொடங்கி தமிழகஅரசு புத்துயிர் ஊட்டியுள்ளது.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்பேரில் உலகத் தமிழ்ச் சங்கத்திற்கென ரூ.25 கோடியில் பெருந்திட்ட வளாகம் மதுரையில் கட்டப்பட்டு வருகிறது. .

உலகத் தமிழ்ச்சங்கத்தின் நோக்கங்களுள் ஒன்றான உலகத் தமிழர்களை ஒருங்கிணைக்கும்வகையில் இதுவரை அயலகத் தமிழர்கள் பங்குபெற்ற ஏழு சிறப்புச் சொற்பொழிவுகளையும் மலேசியத் தமிழ்ப்பள்ளி ஆசிரியர்கள் பங்குபெற்ற சிறப்புக் கலந்துரையாடலையும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின் பேரில் நடத்தியுள்ளது.

ஆஸ்திரேலியத் தமிழர், உலகத் தமிழ் எழுத்தாளர்களுக்கு இடையிலான பரிமாற்ற அரங்கு, தமிழ் அமைப்பினர் பங்கு பெற்ற கலந்துரையாடல் அரங்கு, அயலகத் தமிழ் மாணவர்கள் தமிழ் கற்றலில் உள்ள சிக்கல்களும் தீர்வுகளும் மலேசியா மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய 5 பன்னாட்டுக் கருத்தரங்கங்களையும் பன்னாட்டுத் திருக்குறள் மாநாட்டினையும் மூன்று மாதங்களில் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்பேரில் நிகழ்த்தி சிறப்பான பணியாற்றியுள்ளது.

பத்து கருத்தரங்குகள், 4 தேசியக் கருத்தரங்குகள், 4 தமிழ்அரங்கங்கள், கணினித் தமிழ்ப் பயிலரங்கம், இலக்கியக் கலைவிழா போன்ற நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு உள்ளன. “உலகத் தமிழ் அமைப்புகள் தொகுதி –1” எனும் நூலையும் சீகன்பால்குவின் தமிழ்ப்பணி என்னும் நூலையும் மாண்புமிகுஅம்மா அவர்களின் ஆணையின் பேரில் வெளியிட்டுள்ளது.

உலகத் தமிழ்ச் சங்கம் பற்றியஅனைத்துத் தகவல்களையும் அறிந்து கொள்ளும்வகையில் மதுரையில் உள்ள உலகத் தமிழ்ச் சங்கத்திற்கென தனி வலைத்தளம் மாண்புமிகு அம்மாஅவர்களின் பொற்கரங்களால் தொடங்கப்பட்டுள்ளது.

அயலகத்தில் வாழும் தமிழர்களின் பங்களிப்பினையும் தொண்டினையும் களஞ்சியமாகத் தொகுக்கும்வகையில் உலகத் தமிழ்ச் சங்கம் சார்பில் மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து, ஹாங்காங் போன்ற நாடுகளுக்குச் சென்று ‘அயலகத் தமிழர் களஞ்சியம்’ தயாரிக்கப்பட்டு வருகிறது.

பண்டைய தமிழரின் பெருமைகளையும் சிறப்புகளையும் இன்றைய தலைமுறையினர் கண்டு பெருமை கொள்ளும் வகையில் சங்கத் தமிழ்ப்பாடல்களை ஓவியங்களாகவும், காணொலிக் காட்சியாகவும், அசைவுப் படங்களாகவும் எழிலார்ந்த சிற்பங்களாகவும் காட்சிப்படுத்தும் வகையில் மதுரையில் ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் சங்கத் தமிழ்க் காட்சிக்கூடம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின் பேரில் அமைக்கப்பட்டுவருகிறது.

உலகத் தமிழ்ச் சங்கம் , தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் வாயிலாக உயராய்வு நிறுவனமாக செயல்பட அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின் பேரில் இன்னும் எண்ணற்ற தமிழ்ப்பணிகள் தமிழக அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தனிப்பட்டவர்கள் செய்து வரும் சிறப்புச் செயல்களைப் பாராட்டி நாம் விருதுகள் அளித்து சிறப்பித்து வருகிறோம். சிலர் ஒன்றாகச் சேர்ந்து தமிழ் வளர்ச்சிக்கென்று ஒரு

அமைப்பை நிறுவி அதன் மூலம் எவ்வித எதிர்பார்ப்புகளுமின்றி செயல்பட்டுவருகின்றனர்.

இவர்களின் எதிர்பார்ப்பில்லாத சேவைகளையும், அதனால் தமிழ் மொழிக்கு ஏற்பட்டுவரும் வளர்ச்சியையும் பார்வையில் கொண்டு அந்த அமைப்புகளுக்கும் ஒரு விருதை வழங்கினால் எதிர்காலத்தில் தமிழ் வளர்ச்சிக்கென மேலும் சில தனி அமைப்புகள் உருவாகும் என்கிற உயரிய எண்ணத்தில் ‘‘தமிழ்த்தாய் விருது’’ வழங்குவதென்று மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முடிவுசெய்தது. அதன்படி தமிழ்த்தாய் விருதும் மாண்புமிகு அம்மா அவர்களால் ஏற்கனவே முதன் முறையாக தில்லி தமிழ்ச் சங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்த்தாய் விருது தமிழ் அமைப்புகள் மேலும்சிறப்பாகச் செயல்பட ஊக்குவிக்கும் என்பதில் மாற்றுக் கருத்துகளில்லை. அச் செயல்பாடுகள் உலகளாவிய தமிழ்வளர்ச்சிக்கு வலு சேர்த்திடும்.

நவி என்றாலே புதிது என்பது அர்த்தம். இந்திய பெருநாட்டின் வர்த்தக தலைநகரமான மும்பையின்புதியநகரமான நவி மும்பையில் இத்தமிழ்ச்சங்கம் கடந்த 30 ஆண்டுகளாக சீரோடும் சிறப்போடும் செயலாற்றி அரிய தமிழ்ப்பணி ஆற்றுவது பெருமகிழ்ச்சி அளிக்கிறது.

அது மட்டுமல்லாமல் திருவள்ளுவர் மார்க் என்னும் திருப்பெயருடன் விளங்கும் இப்பகுதியில் செயல்பட்டுவரும் நவி மும்பைத் தமிழ்ச்சங்கம் இனிவரும்காலங்களில் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின் பேரில் தமிழ் வளர்ச்சித் துறையின் கட்டுப்பாட்டில்உள்ள உலக தமிழ்ச் சங்கம் செயல்படுத்த உள்ள எண்ணற்ற திட்டங்களில் தங்களின் அளப்பரிய பங்கினை அளித்து தமிழுக்கும், தமிழ்நாட்டிற்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் பெருமை சேர்ப்பீர்கள் என்ற நம்பிக்கையோடு மிகக்குறுகிய காலத்தில் மிகநேர்த்தியாக இந்த தேசியக் கருத்தரங்கத்தினை சிறப்பாக ஏற்பாடு செய்த நவி மும்பைத் தமிழ்ச்சங்கத்திற்கும், சங்கத்தோடு இணைந்து பணியாற்றிய அனைத்து தமிழ்நல் உள்ளங்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினையும் பாராட்டுகளையும் வாழ்த்துக்களயும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறையின் அரசு செயலாளர் முனைவர் மூ. இராசாராம் இஆப., அவர்கள் பேருரை ஆற்றினார்.

நவி மும்பைத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் திரு. நா.மகாதேவன், ‘‘லெமூரியா கண்டம்’’ இதழின் ஆசிரியர் தமிழ் லெமூரியா, முதன்மை ஆசிரியர் திரு. குமணராசன், மும்பைத் தமிழ்ச் சங்கச் செயலாளர் திரு. மைக்கேல் அந்தோணி, ஆலோசகர்

வ.ரெ.பொ. கிருஷ்ணமூர்த்தி, மும்பை தென்னிந்தியக் கல்வி நிறுவனத்தின் வணிகத்துறை பேராசிரியர் திருமதி மீனாட்சி வெங்கடேஷ், நவி மும்பைத் தமிழ்ச் சங்கச் செயலாளர் திரு. செல்வராசு, மும்பை தமிழாசிரியர் கழகத்தைச் சேர்ந்த திருமதி அனிதா டேவிட், நவி மும்பை தமிழ்ச் சங்கத்தின் நிர்வாகக் குழுத் தலைவர் எம். பாலகிருஷ்ணன் ஆகியோர் கருத்துரை வழங்கிச் சிறப்பித்தனர்.

உலகத் தமிழ்ச் சங்கத்தின் தனி அலுவலர் க. பசும்பொன் வரவேற்புரை ஆற்றினார். நவி மும்பைத் தமிழ்ச் சங்கப் பொருளாளர் திரு. கி.சந்திரமோகன் நன்றியுரை வழங்கினார். இக்கருத்தரங்கில் தமிழ் அமைப்பினர்கள், தமிழ் ஆர்வலர்கள் உள்ளிட்ட ஐநூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

**பல்வேறு அமைப்புகளின் கோரிக்கைகள்:**

**நவி மும்பைத் தமிழ்ச் சங்கம்:**

தமிழ் வழிக் கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்குத் தேவையான புத்தக வசதி, தேர்வில் சிறந்த மதிப்பெண் பெறுவோருக்கு பரிசுகள் வழங்க தமிழக அரசு உதவ வேண்டும்.

மும்பை பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழிக்கான ஆய்வு இருக்கை அமைக்க வேண்டும்.

**புவனேஸ்வர் தமிழ்ச் சங்கம்:**

சார்பில் தமிழ் ஆராய்ச்சியாளர்கள், பயணியர் மற்றும் தமிழர்கள் தங்க, விடுதி கட்ட நிதி தேவை எனக் கோரிக்கை வைக்கப்பட்டது.

**பெங்களூர்த் தமிழ்ச் சங்கம்:**

பெங்களூரு பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை உருவாக்க தமிழக அரசு உருவாக்க வேண்டும். சிறப்பாகச் செயல்படும் பல்வேறு தமிழ்ச் சங்கங்களுக்கு தமிழக அரசு நல்கை வழங்க வேண்டும்.

பெங்களூர் தமிழ்ச் சங்கம் நடத்தி வரும் தமிழ்ப் பள்ளிகளுக்கு நிதியுதவி வழங்கவேண்டும். பிறமாநிலங்களில் வா ழும் தமிழர்களுக்கு அவர்களுக்கு உரிய உரிமைகளைப் பெற்றுத் தர வேண்டும்.

சங்கங்கள் நடத்தும் நூலகங்களுக்கு ஆண்டுதோறும் நல்கை வழங்க வேண்டும். பிற மாநிலங்களில் தமிழ்க் கல்வியை ஊக்குவித்திட ஆவன செய்யவேண்டும். அதற்காக பாட நூல்கள், குறுந்தகடுகள் வழங்க வேண்டும்.

பிற மாநிலங்களில் உள்ள தமிழ்ச் சங்கங்கள் அந்தந்த மாநில மொழியில் மொழிபெயர்த்து வெளியிட தமி ழக அரசு துணை புரிய வேண்டும்.

பல்வேறு மாநிலங்களில் இயங்கும் தமிழ் அமைப்புகளுக்கு சொந்தக் கட்டடம் அமைக்க உதவ வேண்டும்.

மும்பை மாநகராட்சி தமிழ்ப் பள்ளி ஆசிரியர்களின் குழுமம் அனிதா டேவிட் தமிழை முதல் விருப்பப் பாடமாகக் கொண்ட 9வது, 10வது வகுப்பு மாணவர்களுக்கு தமிழ்ப் புத்தகம் கிடைக்கவேண்டும். 9, 10 வகுப்பு பள்ளிகளுக்கு தமிழ் ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படவேண்டும். 10வது வரை தமி ழ்ப் பள்ளிகளில் படிக்க மும்பையில் பள்ளிகள் தொடங்க வேண்டும்.

10 வது தேர்ச்சி எழுதி முதல் மூன்று இடங்களைப் பிடிக்கும் தமிழ் மாணவர்களுக்கு தமிழக அரசு சான்றிதழ் தரவேண்டும். எல்லாத் தமிழர்களுக்கும் சாதிச் சான்றிதழ் அளிக்க வேண்டும்.

**டோம்பிவிலி தமிழ் மக்கள் சங்கம்:**

சரியான தமிழ்ப் புத்தகங்கள் கிடைக்கவில்லை. எனவே, முதல் இரண்டு வகுப்புகளுக்குப் பாட நூல்களை அன்பளிப்பாகத் தரவேண்டும். டோம்பிவிலி தமிழ்ச் சங்கம் நடத்தும் இலவச தமிழ் வகுப்புகளுக்கு 100 குழந்தைகள் வருகிறார்கள். அவர்களுக்கு சரியான தமிழ்ப் புத்தகங்கள் கிடைப்பதில்லை. ஆகவே, நீங்கள் முதல் இரண்டாம் வகுப்பு மாணவர்களுக்கு பாட நூல்களை வழங்கவேண்டும்.

**அனைத்து இந்திய தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பு:**

அனைத்து மத, சாதி, இன, மொழி, புவியியல் எல்லைகளைக் கடந்து உலகப் பொதுமறையாகத் திருக்குறள் திகழ்கிறது. கணினி யுகத்தில் உள்ள நாம் அனைத்து இந்திய தமிழ் அமைப்புகள் இணைந்து திருக்குறளுக்கென்று தனி இணையதளத்தை உருவாக்க வேண்டும். சென்னையில் உள்ள தமிழ் இணையக் கல்விக் கழகத்துடன் அனைத்து தமிழ் அமைப்புகளும் இணைந்து இதை அமைக்க வேண்டும்.

அதைப் போல திருக்குறளைத் தேசிய நூலாக மத்திய அரசை அறிவிக்க வலியுறுத்தி அனைத்து இந்திய தமிழ் அமைப்புகளினஅ கூட்டமை◌ப்பு வலியுறுத்துகிறது.

தில்லிப் பல்கலைக்கழக கல்லூரிகளில் மாதம் ஒருமுறை திருக்குறள் வகுப்பு நடத்தப்படவேண்டும். அதைப் போல மகாகவி பாரதியின் பாடல்களை ஹிந்தி ஆங்கிலத்தில் வகுப்பு நடத்த உதவ வேண்டும். தில்லியில் சிந்தி, பஞ்சாபி, இந்தி ஆகிய மொழிகளுக்கு அகாதெமி உள்ளதுபோல தமிழுக்கும் அகாதமி தேவை.

**ஹைதராபாத் தமிழ்ச் சங்கம்:**

ஹைதராபாத் தமிழ்ச் சங்கத்திற்கு கட்டடம் அமைக்கவும் இடம் வழங்க தெலுங்கானா முதல்வருடன் தமிழக முதலமைச்சர் பேசி உதவ வேண்டும்.

**மும்பைத் தமிழ்ச் சங்கம்:**

மும்பை பல்கலைக்கழகத்தில் மராத்திய படைப்புகளைத் தமிழில் மொழிபெயர்க்க தமிழக அரசு நிதியுதவி செய்யவேண்டும். தமிழ் மகளிருக்கு தமிழ்ச் சங்கம் மூலம் கணினி, தையல் போன்ற பயிற்சிகளை அளிக்க வேண்டும்.

**வெளியீடு:** **இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**